# வள்ளுவர் வலியுறுத்தும் அறிவு நெறி

*முனைவர் மு. சாதிக் அலி*
தமிழ்த்துறைத் தலைவர் (அரசுதவி பெறாப் பாடப்பிரிவு)
சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, ரஹ்மத் நகர், திருநெல்வேலி
https://doi.org/10.5281/zenodo.15526590

*"அறிவு" என்ற சொல் எதனையும் பிரித்தறிகின்ற திறன் மற்றும் அதன் தெளிந்த விவேகத்தின் வெளிப்பாடாக அறியப்படுகின்றது. பகுத்தறிவு என்ற ஒரு திறன் மனிதனிடத்தில் இருப்பதனால் தான் மனிதர்கள் ஏனைய பிற உயிர்களிடமிருந்து வேறுபடுகின்றனர்.*

*ஒரு மனிதன் தன்னிடத்தில் உள்ள அறிவின் மிகுதியினால் மட்டுமே தனித்தறியப்படுகிறான். ஒரு மனிதனிடத்தில் உள்ள நல்லறிவினையும், அதன் வெளிப்படும் அவனது பண்பினையும் அடிப்படையாகக் கொண்டுதான் இந்த அவனை இந்த உலகமானது அறிகிறது.*

*இந்த அறிவுடையவர்களின் ஆற்றல் பிறருக்கும் பயன் தர வல்லது. ஒருவரை தன் வாழ்நாள் முழுவதும் வழிநடத்திச் செல்லக் கூடியது. அறிவினால் ஆகாதது ஒன்றுமில்லை என்னும் அளவிற்கு தனித்துவமானது.*

## அறிவு எனப்படுவது யாதெனின்

*"அறிவு வளர் அகிலம் ஆள்" என்பது முத்தோர் பொன்மொழி அறிவு வளர்ப்பதனால் அகிலம் முழுவதும் தன்வசப்படுத்துகின்ற சிறப்பு அறிவுடையோர்க்கு உண்டாகிறது.*

*அறிவின் சிறப்பு அதன் பிரித்தறிகின்ற பகுத்தறிவு திறனால் வெளிப்படுகின்றது. இதனையே வள்ளுவர்*

***"எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"***

*என்று விளக்கியுள்ளார். அதாவது இந்த உலகத்தில் பலவிதமான கருத்துகள் பலர் மூலம் கிடைக்கப்பெற்றாலும் அவற்றுள் மெய் என்பது எது என்பதனை தெளிவாகப் புரிந்து கொண்டு செயலாற்றுவதே அறிவு என்று குறிப்பிடுகிறார்.*

*அறிவு நிரம்ப வாய்க்கப்பெற்றால் மட்டும் போதுமானது அல்ல. அதனால் சிறப்பாக செயல்படும் போது தான் அவ்வறிவின் மிகுதி தன்மையால் பயன் ஏற்படுகிறது.*

## அறிவுடையோர் எல்லாம் உடையோர்

*அறிவு என்பது மிகப்பெரிய செல்வம் என்பார்கள். அறிவினைக் கொண்டு எந்த சூழ்நிலைகளையும் எதிர்கொண்டு ஒரு மனிதனால் வாழ முடியும் என்பது திண்ணம். கல்வி, வீரம், செல்வம் முதலான எல்லாவற்றையும் அறிவின் துணை கொண்டு பெற்றுவிடலாம். வெற்றி கொள்ள முடியாத மிகப் பலம் வாய்ந்த வீரரைக் கூட ஒருவர் தனது அறிவின் கூர்மையின், அறிவின் பலத்தால் எளிதாக வெற்றி பெற முடியும், வீழ்த்திவிட முடியும். இதனையே வள்ளுவரும்,*

***"அறிவுடையோர் எல்லா முடையோர் அறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்"***

*என்னும் பொருளில், அறிவு இல்லாதவர்களுக்கு வேறு எது இருந்தாலும் பெருமையில்லை. அறிவு உள்ளவர்களுக்கு வேறு இல்லாவிட்டாலும் சிறுமை இல்லை என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு அறிவின் திறனுடையவர்கள் இருப்பவற்றைக் கொண்டு, எல்லாவற்றையும் சாதித்து விடக்கூடிய திறன் படைத்தவர்கள். இதனால் இவர்கள் மற்றவர்களிடமிருந்து தனித்துவமாக அனைவரின் முன்னும் மிளிர்வார்கள். அதுமட்டுமன்றி அனைவரின் மனதிலும் இடம் பிடிப்பார்கள்.*

**அறிவினால் ஆகுவது உண்டோ?**

அறிவுடைமை என்பதன் பயன் அது தனக்கு மாத்திரம் பயன்படுவதாக இருக்கக் கூடாது. தன்னைச் சார்ந்த கற்றோருக்கும், மற்றோர்க்கும் பயன்படக்கூடியதாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அது அறிவு எனக் கொள்ளப்பட மாட்டாது.

**"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தம்நோய்போல் போற்றாக் கடை"**

தன்னை போல மற்றவர்களையும் பாவிக்கின்றவர்கள் உலகத்தில் மிகச் சிறந்த அறிவுடையவர்களாக இருப்பர் என்கிறார் வள்ளுவர். அறிவுடையவர்களிடத்தில் இயல்பாகவே நல்ல சிந்தனைகளை பின்பற்றுவதோடு, அதனை பிறருக்கு எடுத்துச் சொல்லும் குணமும் இருக்கும், இயல்பாகவே அன்பும் அவர்களிடத்தில் குடியிருக்கும்.

**அறிவின் இன்றியமையாமை**

அறிவு என்பது எல்லா உயிரினங்களுக்கும் குறிப்பாக மனிதர்களுக்கு அவசியமானதொன்று அறிவின் துணை இல்லாதவர்கள் துன்பம் நிறைந்த வாழ்வையே துணை கொள்வார்கள் என்பது உறுதி. உதாரணமாக இதனையே வள்ளுவரும்,

**"அறிவிலார் தாந்தம்மை பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது"**

என்று விளக்குகிறார். அதாவது அறிவு அற்றவர்கள் தமக்குத்தாமே செய்து கொள்ளும் துன்பமானது, அவர்கள் எதிரிக்கு கூட செய்ய மாட்டார்கள் என்கிறார்.

அதுபோன்று வருமுன் காக்கும் உத்தி அறிந்தவர்களாக விளங்குவர். அதற்கேற்ப செயல்படும் போது அவர்களை துன்பம் அணுக வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. இதனையும் வள்ளுவர் தன் குறள் மொழியில்,

**"எதிரதாக் காக்கும் அறிவினார்க் இல்லை
அதிர வருவதோர் நோய்"**

என்னும் பொருளில், இவ்வுலகில் எப்பொழுதுமே வருமுன் அறிந்து காத்துக் கொள்ளும் திறன் வாய்ந்தவர்களுக்கு திடீரென்று வாழ்வினையே புரட்டிப் போடும் அளவிற்கு அதிர்ச்சி தரக்கூடிய துன்பம் எதுவும் ஏற்படாது என்று அறிவின் காப்பினை தெளிவுபடுத்துகிறார்.

ஆகவே நல்லறிவுடைய மனிதர்களால் மட்டுமே மகிழ்ச்சியான வாழ்வினை இவ்வுலகில் தடையின்றி வாழ முடியும்.

**அறிவின் சிறப்பு**

அறிவு நம்மை வழிநடத்திச் செல்லும் ஒரு பலம் வாய்ந்த ஊன்றுகோல். இவ்வுலகில் எவ்வாறு நாம் வாழ வேண்டும் என்பதற்கான ஒரு வழிகாட்டி தான் அறிவு, அதனிலும் பகுத்தறிவு, நல்லறிவு என்பது ஒரு மனிதனை வாழ்வில் தடம் பதிக்கச் செய்யும் தன்னிகரில்லாதது.

**"அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ
தஞ்சல் அறிவார் தொழில்"**

என்னும் குறளில் அறிவுடையோர், அறிவற்றோர் இருவருக்கும் இடையிலேயான வேறுபாட்டினை அழகுற எடுத்துக்காட்டியுள்ளார். அதாவது அறிவில்லாதவர்கள் தான் அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்ச மாட்டார்கள். அறிஞர்கள் மட்டுமே அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுவார்கள். அதனால் அறிவுடையவர்களை துன்பம் அணுக வாய்ப்பில்லை.

அதே போன்று அறிவுடையவர்கள் ஒரு செயலினை துணிந்து செய்யும் போது அதன் எதிர்விளைவு அத்தகைய தன்மையுடையதாக இருக்கும் என்பதனை ஒரு முறைக்கு பல முறை ஆய்ந்து அறிந்த பின்னரே அந்த செயலை செய்து முடிக்கும் தணிண்ம் கொள்வர். அறிவு இல்லாதவர்கள் அதனைப் பற்றி ஒரு சிறிதும் சிந்திக்க மாட்டார்கள்.

**"அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அதறி கல்லா தவர்"**

என்கிறார் வள்ளுவர். ஆகவே அறிவு என்பது ஒரு மனிதனை விலங்கு நிலையில் இருந்து பிரித்தறியச் செய்வதாக சிறப்பு பெறுகின்றது என்றால் அது ஆகச்சிறந்த உண்மையாகும்.

### நன்றின் பால் உய்ப்பது அறிவு

இம்மை, மறுமை ஆகிய இரண்டிலும் நமக்கு ஏற்படும் நன்மை, தீமைக்கு காரணமாக இருப்பது அறிவு தான். மனதிற்கும், அறிவிற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. மனம் சிந்தனையின்றி உணர்வின் அடிப்படையில் செயல்படக்கூடிய தன்மை உடையது. பின் விளைவுகளை எதிர்நோக்காது. தனக்கு என்ன தோன்றுகிறதோ அதனையே முடிவாக கொண்டு செயல்படும். ஆனால் அறிவோ சிந்தித்து மட்டுமே செயல்படும். பின் விளைவுகளை உற்று நோக்கி, அதன் பலனையும் எதிர்நோக்கி செயல்படும். அது மட்டுமன்றி தனக்கு என்ன தோன்றுகிறதோ அதனால் தனக்கும், தன்னை சுற்றி இருக்கக் கூடிய பிறருக்கும் என்னென்ன இன்பம், துன்பம் பிறக்கும் என்பதனை அடியொற்றியும் பகுத்தறிந்து, ஆராய்ந்து, தனித்துவமாகச் செயல்படும்.

மனம் என்ன சொல்கின்றதோ அதனை அறிவு தன் சிந்தையில் ஏற்று, அது சரியானதுதானே என்பதனை தனக்குத்தானே பலமுறை வினாக்களை எழுப்பிக் கொண்டு, அத்தகைய வினாவிற்கு பதிலினை பெறுவதோடு மட்டுமல்லாமல் யாருக்கும் தீங்கின்றி செயல்படக்கூடிய தன்மையில் தன்னை நிலைநிறுத்திக் கொண்ட பின்னரே துணிந்து செயல்படும். இத்தகைய செயல்பாட்டில் சிறிது தடம் பிறழ நேர்ந்தாலும் அதனை விட்டு விலக்கி விடும்.

"சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றிபா லுய்ப்ப தறிவு"

என்று இதனைக் கூறுவார் வள்ளுவர்.

அதாவது மனம் போகும் வழியெல்லாம் போக விடாமல் தீய வழிகளைத் தள்ளிவிட்டு, நல்ல வழியினைத் தேர்வு செய்வதே அறிவுடைமையாகும் என்கிறார்.

### அவ்வதுறைவது அறிவு

நல்ல பண்புடையோர், பிற உயிர்களுக்கு தீங்கிழைக்காத மனம் கொண்டோம், பிறர் நோகக்கண்டு தான் நொந்து உறைவோர், நன்மை, தீமை ஆய்ந்து செயல்படும் நல்லறிவுடையோர், துணிந்து செயல்படும் திறன் மிக்கோர் ஆகியோரே உயர்ந்தோர் எனப்படுவர். இத்தகைய உயர்ந்தோரே உலகோர் எனப்படுவதால் அவர்களுடன் நட்பு கொண்டு இன்பம், துன்பம் ஆகிய இரண்டினையும் ஒரே நிலையாகக் கருதுவதே அறிவுடைமை கொண்டோரின் செயல்படாகும்.

"உலகந் தழீஇய தொட்பம் மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு"

என்கிறார் வள்ளுவர்.

மேலும் அத்தகைய உயர்ந்தோர் வழியில் உலகம் எவ்வாறு இயங்குகின்றதோ அதற்கேற்ப நடந்து கொள்வதே அறிவுடையோரின் இயல்பாகும்.

"எவ்வா துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு"

என்கிறார். அவ்வாறு செயல்படுவோர்க்கு இன்பம் தவிர துன்பம் என்றும் வருவதில்லை என்பதனை விளக்கியுள்ளார்.

### அரணாகிய அறிவுடைமை

அறிவுடைமை என்பது மனிதனுக்கு மிகப் பெரிய அரணாகும். இத்தகைய அறிவுடைமை எத்தகைய சூழ்நிலையிலும் ஒருவரைப் பாதுகாக்கும் வல்லமையுடையது.

நிலையற்ற இவ்வுலக வாழ்க்கையில் இறுதி காலம் வரையிலும் ஒருவரைக் காப்பாற்றும் கருவி அறிவு தான். இதனை பகைவராலும் அழிக்க முடியாது. இந்த அறிவானது ஒரு மனிதருக்கு அழிவு வராமல் பாதுகாக்கும் அரண் என்கிறார் வள்ளுவர்.

"அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்"

என்று குறிப்பிடுகிறார். ஆகவே மனிதருக்கு அறிவுடைமை மிகப்பெரிய ஆற்றலாகும். இதனை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொண்டால் அது நமக்கு நன்மை பயக்கும்.

"தனக்கு தெரிந்ததை தெரியும் என்றும்,
தெரியாததை தெரியாது என்றும் அறிவது தான்
அறிவு"

*என்கிறார் கன்புசியஸ். அறிவு மட்டுமே வாழ்க்கையை மேம்படுத்தும் சக்தி வாய்ந்தது. எனவே அறிவு எப்போதும் நாம் தேடி தேடி அடைய வேண்டும்.*

***அறிவு அரண்***
***அதனில் நாம் அடைவோம்***
***இனிதே சரண் !***
***அறிவால் இணைவோம்***
***அகிலம் காப்போம்!***
***அறிவே சக்தி***
***இதுவே நம் வாழ்வின் யுக்தி!***
***அறிவால் வெல்வோம்***
***அகிலம் முழுதும் நம்***
***கைப்பிடிக்கும் கொள்வோம்!***
***அறிவின் மழையில் நனைவோம்***
***தினமும்....***
***பிழையின்றி அதனைப் பெறுவோம்***
***அனுதினமும்...***

**அறிவே ஆற்றல்**

*ஒருவர் நூல்பல கற்றவராக விளங்கிடினும் அவர் பகுத்தறிவு அற்றவராயின் அறிவுடையவராகக் கொள்ளப்பட மாட்டார். கல்வியறிவு, அனுபவம் மூலமாக வருகின்ற அறிவு இரண்டும் ஒருசே வாய்க்கப் பெற்ற நல்லறிவு உடையோர் சிறந்த அறிவாற்றல் உடையவர்களாகக் கொள்ளப்படுவார்கள்.*

*ஒருவரிடம் நல்லறிவு உண்டெனின் அவரை சமூகம் அங்கீகரிக்கும். அவரது திறமைக்கு நன்மதிப்பானது சமூகத்தால் வழங்கப்படும். இதனால் தான் கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று சொல்லப்படுகிறது.*

*இந்த உலகத்தில் மனிதர்களாக பிறந்தவர்கள் அனைவரும் பிறப்பினால் சமமானவர். இருப்பினும் அவர்களிடம் இருக்கின்ற பணம், புகழ், செல்வம், ஆடம்பரம் எல்லாம் அவர்களுக்கு தற்காலிகமான, நிரந்தரமற்ற மகிழ்வினையும், பெருமையினையும் தரலாம். ஆதலால் மனிதர்கள் இவற்றை அடைவதற்கே அதிகம் முனைப்போடு செயல்படலாம்.*

*ஆனால் அறிவு இவை அனைத்திற்கும் மேலான ஒன்று. இது எந்த காலத்திற்கும் அழியாத பெருமை உடையது. என்றைக்கும் நம்மைக் காப்பது அறிவினால் உண்டாகும் ஆற்றல் என்றால் யாராலும் மறுக்க முடியாது.*

*அறிவால் நலம் பயில்வோம்*
*நலம் பயப்போம் !*
*வாழ்வில் சிறப்போம்*
*வாழ்வினை சிறப்பிப்போம் !*
*“அறிவற்றங் காக்கும் கருவி”*
*மனதில் விதைப்போம்*
*வாழ்வில் தடம் பதிப்போம்.*